Cr.M.P.No. 7590/2013 in Crl.O.P.No.2/2000

நாள் 17.03.2021

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**குறுக்குவிசாரணை(அரசு தரப்பில்)**

நான் எஸ்.எஸ்.எல்.சி. படித்துள்ளேன். 1969 ல் எனக்கும் செபாஸ்டினுக்கும் திருமணம் நடந்தது. தற்போது நாங்கள் மதுரை ஞானஒளிபுரத்தில் குடியிருக்கிறோம். மனுவில் கண்ட சொத்துக்களை வாங்கும் போது நான் வருமான வரி கட்டியிருக்கிறேனா என்றால் கட்டியிருக்கிறேன். அவ்வாறு வருமான வரி கட்டியதற்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. இந்த சொத்துக்கள் வாங்கிய காலத்தில் நான் வேலை பார்த்ததற்கான ஆவணங்களையோ அல்லது வருமானம் ஈட்டியதற்கான ஆவணங்களையோ நான் இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு பூர்வீக சொத்துக்கள் உள்ளது என்பதை காட்டக்கூடிய ஆவணங்களையும் அதிலிருந்து வருமானம் வருகிறது என்பதை காட்டக்கூடிய ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சொத்துக்களை நான் வாங்கும் போது என் கணவர் அரசு பணியில் இருந்தார் என்றால் இல்லை. இந்த சொத்துக்களை நான் வாங்கும் போது என் கணவர் அரசு பணியில் இல்லை என்று என் மனுவில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. என் கணவர் எந்த வருடம் அரசு பணியில் சேர்ந்தார் என்று என்னால் சொல்லமுடியாது. நான் திருமணம் செய்யும் போது என் கணவர் அரசு பணியில் தான் இருந்தார். எனது திருமணம் முடிந்த பிறகு தான் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சொத்துக்களை நான் வாங்கினேன் என்றால் சரிதான். என் வருமானத்தை வைத்து வாங்கினேன். என் வருமானத்தை வைத்து இந்த சொத்துக்களை வாங்கவில்லை என்றும் என் கணவர் வருமானத்தை வைத்து தான் இந்த சொத்துக்களை வாங்கினேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் கணவர் அரசு பணியில் இருந்ததால் சொத்துக்களை அவர் பெயரில் வாங்காமல் என் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த மனுவில் கண்ட சொத்துக்களின் உண்மையான உரிமையாளர் என் கணவர் தான் என்றும் நான்

வெளிதோற்ற உரிமையாளர் அதாவது பினாமி என்றும் சொன்னால் சரியல்ல. என் கணவர் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு மதுரை தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து அதில் என் கணவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அந்த தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டு விசாரணை நீதிமன்ற தீர்ப்பு உறுதி செய்யப்பட்டு சிறைத்தண்டனை மட்டும் 2 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பை எதிர்த்து என் கணவர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அம்மனு தள்ளுபடியாகிவிடடது விட்டது என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது)

ஒப்பம்.ரோசரீஸ் ராஜம் ஒப்பம். எளஎ முதன்மை அமர்வு நீதிபதி